UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
21-11-1986
PERIODICALS SECTION
LIBRARY

உ

# நாவலர் குரல்

நாவலர் புகழ் பரப்பும் நல்ல தமிழ் ஏடு

குரல் 1 | ஒலி 2 | மார்கழி 17 | 1986-01-01 | விலை: ரூபா 1-50


## நாவலர் குரல் நன்மை விளைக்கட்டும்

### மாவை ஆலய, நல்லை ஆதீன முதல்வர்கள் வாழ்த்து

நாவலர் குரல் இசழின் முதல் இரு பிரதிகளையும் மாவை தேவஸ்தான முதல்வர் மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களும், நல்லை ஞானசம்பந்தராதீன மகாசந்நிதானம் சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகளும் பெற்று ஆசீர்வதித்தனர்.

மாவை முருகன் ஆலய முதல்வர் மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கு மாவை ஆதீனத்தில் நாவலர் குரல் பிரதியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணிமன்றத் தலைவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் வழங்கினார். மகராஜஸ்ரீ குருக்கள் அவர்கள் பிரதியைப் பெற்று, "நாவலர் பெருமானின் சிலை மீண்டும் நல்லூர் முருகன் ஆலய முன்றிலிலிருக்கும் பணி மண்டபத்திற்கே கொண்டுவரப்பட வேண்டும் என்ற சைவப் பெருமக்களின் உணர்வுக்கு வடிவம் கொடுக்கும் வகையில் நாவலர் குரல் வெளிவருவது நம்பிக்கை யூட்டுவதாக அமைகிறது. சிலை மீண்டும் வரவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, சிலையை முந்திய இடத்தில் அமர்த்தும் நற்பணியை சிலையை அகற்றிய நாவலர் சடையினர் செய்ய அவர்களுக்கு எல்லாம்வல்ல முருகப் பெருமான் உள்ள உரனும் உயர் நோக்கும் அளிப்பாராக. மாவிட்டபுரத்தில் இது பற்றிய விசேட பொதுக் கூட்டமொன்று நடத்துவோம்" என்று ஆசி வழங்கினர்.

( 2 ஆம் பக்கம் பார்க்க )



நாவலர் குரலின் முதலிரு பிரதிகளையும் பெற்று ஆசி வழங்கிய மாவை மகாராஜஸ்ரீ, நல்லைக் குருமணி ஆகியோரையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணிமன்றத் தலைவர், முதன்மை உறுப்பினர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## முழக்கம்

### எழுந்தொலிக்கட்டும் நாவலர் குரல்

தமிழன்பர்களே, சைவசீலர்களே

உங்கள் சூழலில் தமிழ்க் கழகங்கள் உண்டா? சைவாபிவிருத்திச் சங்கங்களுண்டா? இந்து சமய சங்கம், இந்து மன்றம் உண்டா? சிவசாரிய சங்கம் உண்டா? சிவாலய பரிபாலன சபைகள் உண்டா? தர்ம கர்த்தா சபைகள் உண்டா? திருப்பணிச் சபைகள் உண்டா? இல்லை என்ற பதில் இதற்கில்லவேயில்லை. எனில், இவையெல்லாம் யார் போதனையால் எழுந்தவை? எவர் சாதனைகளைப் பின்பற்றுபவை? என்பதை ஒரு கணஞ் சிந்தியுங்கள்! 1968 இல் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபைக்கு இருதலைமுறைகள் முந்தியவை உங்கள் தமிழ், சைவ ஸ்தாபனங்கள் என்பதில் உங்களுக்குப் பெருமையுண்டு. அவ்வகையில் நாவலர் மகிமை, நாவலர் பணி நலன்களில் உங்களுக்கிருக்க வேண்டிய அக்கறை யாவும் இங்கு வேறெவர்க்கும் இருக்கமுடியாது,

( 7 ஆம் பக்கம் பார்க்க )

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாவலர்க்குச் சிலையெடுத்த சபையின்

## உயிர் மூச்சு

'நடைமுறைத் தமிழியக்கம் நாவலர் சபையின் தாய்'-சிந்தாமணி 30-8-69. நடை முறைத் தமிழியக்க நாயகன் திரு. க. இளையதம்பி 23-10-83இல் கண்மூடும்வரை நாவலர் சபை சம்பந்தப்பட்ட சகல கைங்கரியங்களுக்கும் முதலாயும் நடுவாயும் மூச்சு வாங்க வாங்கப் பாடுபடும் முதல் தொண்டனும் திகழ்ந்தவர். நல்லூர் வீதி மணிமண்டபத்தில் ஒரு சிலையிருக்கிறதென்ற நினைவு அவர்களுக்குக் கனவிலுமில்லை. சாக்ஷாத் நாவலர் பெருமானே நல்லூர் நிர்வாகத்துக்கு உபதேச மூர்த்தியாய் முன்னிருந்த அதே நிலையில் வந்திருக்கிறார் என்பது அவர் உள்ளப்பொறை. 8-10-72 தினகரனில் வெளிவந்த அவர் கட்டுரை அவ்வுள்ளப் பொறையை உதிர்த்து விட்டிருத்தல்கண் கூடு. அவரைப் பற்றி 30-8-69 சிந்தாமணியிற் சித்திரிக்கப்பட்ட ஒரு சொல்லோவியம்:

> "இப்படியாக நமது வியாபாரிகளும் அவர்களின் கீழுள்ள ஊழியர்களும் தமிழை அழித்துத் தொழிலை வளர்த்து வரும்போது, ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் மனேஜராக வேலை பார்க்கும் திரு. க. இளையதம்பி தமிழுக்காக உயிரைக் கொடுக்கவும் அதற்காக முள்மிதியடியின் மீது நடக்கவும் தயாராயிருக்கிறாரென்றால் அவருடைய தமிழ்ப் பற்றை நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா?"

"திரு. இளையதம்பியைப் பார்த்ததுமே என்மனதில் ஒருவித பதிவு உடனடியாகவே ஏற்பட்டது. முகத்திற் சாந்தமும் கண்களில் நேர்மையும் பிரதிபலித்தன. அழகான பல் வரிசையைக் காட்டுங் கள்ளங்கபடமற்ற சிரிப்பு, உள்ளத்தின் வெள்ளைத் தனத்தை விளக்கிற்று நெஞ்சில் உறுதியும எடுத்த காரியத்தை எத்தகைய இன்னல் குறுக்கிட்டாலும் நடைமுறையிற் செய்து முடிக்கக் கூடிய பொறுமையும் உடையவர் இந்நடைமுறைத் தமிழ் இயக்ககாரர் என்பது



நடைமுறைத் தமிழியக்கம்

திரு. க. இளையதம்பி

தெரிந்தது. அத்தோடு இவரிடம் நிரம்பியிருக்கும் நாவலர் பக்தி அசல் பக்திதான் என்பதும் போலி அல்ல என்பதும் புலனாயிற்று"—இது அச்சொல்லோவியம்.

தமிழ். சைவ தர்மக் காதலர்களுக்கு ஒரு தேன்மதி இந்த இளையதம்பி.

இளையதம்பியின் இரண்டாமாண்டு நினைவு நாளில் அஞ்சலி செலுத்துகிறோம்.

## நாவலர் குரல் ( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணிமன்றத்தின் சார்பில் அதன் முதன்மை உறுப்பினர் திரு. பே. சோமசுந்தரம் அவர்கள் நல்லைக் குருமணிக்கு முதற் பிரதியை வழங்கினார். முதற் பிரதியைப் பெற்று ஆசீர்வதித்த குருமணி, "நாவலர் சிலை அகற்றிய செயல் காரணமாக ஏற்பட்ட முரண்பாடுகள் பெரிதாக வளர்ந்து விட்டன. சிலையை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோர் மிகவும் பொறுப்புணர்வோடு நடந்துகொள்ள வேண்டும். ஒரு நல்ல தீர்வு ஏற்பட எம்மால் இயன்றவரை முயல்வோம். நாவலர் குரல் நாவலர் புகழை நிலைநாட்டவும் அவரது பணிகளைத் தொடரவும் பணி புரிவதாக" என வாழ்த்தினார்.

## பகிடியும் வெற்றியும்

பெரியார்கள் பிறந்த இடத்தில் சிலை வைப்பதுதான் வழக்கமாமே!

அப்படியானால் சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் இரண்டு பேருக்கும் பிறப்புக் கொப்பியில் இடப்பதிவு பிழையாக்கும்!

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவைச் சிந்தனைச் சிதறல்கள்

**போதாரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்……**

அச்சமற்ற வாழ்வும் அசதியற்ற நித்திரையும் இச்சகத்துக்குச் சொந்தமோ! அநீதி அக்கிரமங் கட்கு அஞ்சா வாழ்வு ஒருபுறம். அவற்றை அடித்து மூழ்க்கி எடுத்துரைத்தாலும் கேட்டது பாதி கேளாதது பாதி; பரண்டு மறு கன்னத்தைத் தலையணையில் அழுத்தும் நித்திரா மோஹம் மறுபுறம். அவ்வளவுக்குச் சொகுசு தரும் புஷ்ப சயனம், போதார மளி, பூமெத்தை, மாயாவிகார மயக்கமெத்தை. திருவெம்பாவையும் வருகிறது போகிறது, நினைவுறுத்தியுந்தான் பார்க்கிறது. ஆனால்? — ? — ? நாட்டின் குரலுக்கும் அதுதான்; நாவலர் குரலுக்கும் அதுதானே?

* * *

கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ

நல்லைநகர் நாவலனார் நற்புகழே பாடுகிறது 'நாவலர் குரல்'. கேட்டதோ, கேட்டிலதோ?

* * *

'ஆழியான்' அன்புடைமை யாமாறும் இவ்வாறோ?

விஷ்ணு போல நித்திரைச் சுகியராயும் அதே நாவலர்க் கன்பராயும் நாமிருக்கும் விதமோ இவ் விதம். சே! ஒன்றுக்கொன்று முரண் அன்றியும், நாவலர் நல்லூரை விரும்பவில்லை; நாவலர் சபையார் முன் தவறிழைத்து விட்டார்கள் என்று வெட் போக்காக விமர்சிப்பது தானோ நாவலர்க்கு 'ஆழியான்' காட்டும் அன்புடைமை.

* * *

வாழி, ஈதென்ன உறக்கமோ? வாய்திறவாய்:

என்னடா இந்த உறக்கம்! எம்பெருமான் நாவலனார் திருப்படிமம் முக்காடிட்டு மூடிப்போய் எங்கோ மூலையொன்றில் முடங்குகிறதே! ஈதென்ன பரிசுகேடு? ஒளிந்த வசைகேடு? முழித்துப் பார்த்தாற்போல் இருக்கிறதே நாவலர் மணிமண்டபம். உகந்த இடம், சிறந்த இடம், உசிதமான இடம், ஊரெல்லாம் மகிழுமிடம், நாவலர் உன்னதத்துக்கேற்ப உன்னதமான வசந்த மண்டபம். அவர் தெய்வீகப் படிமம் அங்கே திரும்பிவர வாய் திறப்பீர்களாக. வாயடைத்த தினசரிகள் உங்கள் வாய்க்குரலுக்கிடமளியா. அந் நோக்கில், அச்சிட்டுப் பலரறிய அறிக்கைகளாய் உங்கள் வாய்க் குரலை வழங்குவீர்களாக.

* * *

மாலறியா நான்முகனுங் காணாமலை

அறிஞரென் றிருந்தும் ஆவதறிந் தொழுக அறியாராய் அன்றுடத் தேவைக்கே அவசமுறும் மயக்கினரும், ஆகாததற்குச் சான்றுரைக்க அவதிப்பட்டுப் போய் அவமானத்தினால் முகஞ் சோர்வோருங் காண முடியாத சைவ கலாசார சிகரம் நாவலர் பெருமான். [ மால் — மயக்கம், நால்முகன் — தொங்கப்போட்ட முகமுள்ளவன் ].

* * *

அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்

சைவத்தின் வாழ்முதல், சைவசேனாபதி, தேசிய வீரன், செந்தமிழ்க் காவலன், வசனநடை தந்த வல்லாளன், சொல்லரசன் என்றெல்லாம் நாவினிக்க, நரம்பினிக்க, நாமினிக்க, ஊனினிக்க, உயிரினிக்க, உளமினிக்கச் சீராட்டிச் சீராட்டிப் பாராட்டுவீர்களே! ஒருகால் எழுந்து வாருங்களேன் அன்பரே!

* * *

ஏல் ஓர் எம்பாவாய்

எம் பெரும் நேயர்களே! உங்களுக்கு இது நல்லதோர் சந்தர்ப்பம். உங்கள் பாலுள்ள நாவலர் அன்பு அசலா போலியா எனச் சோதிக்க வந்த சோதனையே இத்திருப்படிமக் கடத்தல். இதனை நன்றாக உற்றுணர்ந்து ஒருங்கள். உணர்ந்து நெஞ்சகற்றி முன்வந்து இதனை ஒரு சவாலாக ஏலுங்கள். அதனால் நாவலர் சிலைப்புகழ் தன்மானத்துடன் தலையெடுக்கப் பார்த்து மகிழும் அரிய வாய்ப்பு உங்களுக்கிருப்பதையெண்ணிப் பெருமை கூறுங்கள். நல்லூரான் சந்நிதியிற் சைவ நீதி மறுபடியுங் கொலுவிருக்க அவளருளை நேருங்கள். உதவி கிட்டும். அச்சம் வேண்டாம். ஆர்வம் வேண்டும்.

வணக்கம்

## யாழ் நகரில் சியா - உல் - ஹக்

பாகிஸ்தான் ஜனாதிபதி சியா அண்மையில் இலங்கைக்கு வந்து சென்றது பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் யாழ்ப்பாணத்தில் சியா - உல் - ஹக் இருக்கிறாரா? என்று நீங்கள் வியப்படையலாம். இங்கும் சியா வாழ்கிறார்; ஆள்கிறார். எமது நிருபர் அனுப்பிய செய்தியைப் படித்து ஐயம் அகற்றுங்கள்.

மதம் மாற்றுவதல்ல: மனம் மாற்றுவதே எமது குறிக்கோள் - என்ற நோக்குடன் யாழ்ப்பாணத்தில் ஒரு சஞ்சிகை வெளிவருகிறது. அதன் விழா ஒன்று அண்மையில் நடைபெற்றது. பத்திரிகையாளர் தலைமையில் நடைபெற்ற விழாவில் உள்ளூர் அதிகாரி ஒருவரும் கலந்துகொண்டார். உள்ளூர் அதிகாரியை "யாழ்ப்பாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் எவரும் இல்லை. எனவே, இவர் இன்று இப் பகுதியின் சியா - உல் - ஹக் ஆக விளங்குகிறார்" என்று பத்திரிகையாளரான தலைவர் அறிமுகம் செய்தார்.

அறிமுகத்தால் 'குளிர்ந்த' உள்ளூர் அதிகாரி "நான் சியா தான் ஆனால், படுகொலை செய்யாத சியா" என்றாராம்.

சோக்கிரதீஸ் கூறுகிறார்: "அனீடஸ் உனக்கு மிகமிக அற்ப ஆசை"

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கேட்டபடி — நல்லை நாவலர்

மகா மகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர்

நாவலர் சொல் விளக்கம்;

தமிழ்ப் புலவர்களில் கவி, கமகன், வாதி, வாக்கியென நான்கு வகையினர் உண்டு. எந்தச் சமயத்திலும் கொடுத்த விஷயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசும் ஆற்றலுடையவரை வாக்கியென்று சொல்வார்கள். 'வாக்வி' என்ற வடசொல்லின் திரிபே அது. அதனையே நாவலர் என்று தமிழிற் கூறலாம்; பண்டைக் காலத்தில் கவிபாடும் ஆற்றலுடையாரையும் நாவலர் என்று வழங்கினர். இக்காலத்தில் நல்ல பிரசங்க சக்தி வாய்ந்தவர்களை நாவலரென்று சொல்வதிற் பிழையொன்றுமில்லை.

நாவலருள் நாவலர்

தமிழ் நாட்டில் எவ்வளவோ நாவலர்கள் இருப்பினும் நாவலரென்று கூறிய மாத்திரத்தில் அச்சொல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையே குறிக்கும். இதற்குக் காரணமும் அவர் நாவலர்களுக்குள் சிறந்தவராக விளங்கியமையேயாகும்.

கண்டதில்லை கேட்டதுண்டு

நாவலரை நான் பார்த்துப் பழகுவதற்குரிய சமயம் நேர்ந்ததில்லை. ஆயினும் அவரோடு பழகியவர்களிடமிருந்தும் அவரைப்பற்றிப் பல செய்திகளைக் கேட்டிருக்கிறேன். அவற்றைக் கொண்டு என் அகக் கண்ணில் ஓர் உருவத்தை அமைத்துப் பார்ப்பது என் வழக்கம்.

சைவமும் தமிழும் ஓங்க

அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது வாழ்க்கை நெறி என் உள்ளத்தைக் கவரும். கல்வியறிவு மிகச் சிறந்ததே. ஆயினும் அவ்வறிவு ஒழுக்கத்தோடு இயையும்போது அதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டாகின்றது.

நாவலருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. பொருள் வருவாயையே தலைமையாகக் கருதி அவர் வாழ்வு நடத்தவில்லை. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும் பொருட்டு அவர் மனமொழி மெய்களால் தொண்டு புரிந்து வந்தார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் யாழ்ப்பாணத்திலமைந்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாக்ஷிகளாகும்.

பிரசங்க வன்மை

அவருடைய பிரசங்க சக்தி அவருக்குப் பெரும் புகழை உண்டாக்கிற்று. நாவலரென்னும் பெயரும் அதனாலே வந்தது போலும். "வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்பது ஒரு தமிழ்ச் செய்யுட்பகுதி. "படைகளோடு சென்று போர்புரிந்து சாவார் எளியர். சபையிலே போய்த் தைரியமாகப் பேசுவோர் மிகச் சிலர்" என்று திருவள்ளுவரும் கூறினர், அத்தகைய அரிய பிரசங்க வன்மை நாவலரிடத்திலே நன்கு அமைந்திருந்தது.

அக் காலத்துக்கு முன்பு பெரும்பாலும் புராணப் பிரசங்கங்களும் வாதங்களுமே சபைகளில் நடைபெற்றுவந்தன. பொதுவாக ஒரு விஷயத்தை மேற்கொண்டு முறைப்படுத்திக் காரண காரியங்களைக் காட்டி ஆக்ஷேப சமாதானங்களோடு பேசும் வழக்கம் தமிழ்நாட்டில் மிகக்குறைவாக இருந்தது. கிறிஸ்தவ சமயப் பாதிரிமார் செய்த உபந்நியாசங்களின் முறை தெளிவாகவும் எளிதிலே யாவரும் அறிந்து சுவைப்பதற்குரியதாகவும் இருந்தது. அந்த முறையை நாவலர் பயின்று அதிற் பேராற்றல் அடைந்தார்.

சீர்திருத்தச் செம்மல்

பிறரிடம் குறைகாணின் கண்டிப்பது நாவலர் இயல்பு. பொது நிலையங்களிலும் தர்ம ஸ்தாபனங்களிலும் நிகழும் தவறுகளை யாருக்கும் அஞ்சாது வெளியிட்டார். அவர் எழுதிய கண்டனப் பத்திரங்கள் பலவற்றை ஆராய்ந்தால் ஒவ்வொரு ஸ்தாபனமும் நெறிபிறழாமல் நடைபெற்று வரவேண்டுமென்பதில் அவருக்கு இருந்த ஊக்கம் புலப்படும்.

ஆயகலைகள்

நாவலர் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் உயர்வும் கல்விப் பெருமையும் சைவசீலத்தின் சிறப்பும் கமழ்ந்தன. அவர் சமயத் தொண்டராகவும் நாவன்மை மிக்கவராகவும் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் விளங்கினர்.

மகாவித்துவான் பாராட்டு

என்னுடைய தமிழாசிரியரான திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களும் நாவலரும் ஒரு காலத்தினரே. இருவரும் நெருங்கிப் பழகியதுண்டு. நாவலருடைய குணநிசயங்களைப் பிள்ளையவர்கள் அடிக்கடி பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

புகழ் நிலைபெறும்

இப்பொழுது தமிழ் நாட்டினருக்குத் தமிழினிடத்தில் அன்பு வளர்ச்சி பெற்றுவருகின்றது. அதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒரு காரணம் ஆவார். அவர் என்றும் தமிழ் நாட்டினரது நினைவில் இருப்பவராதலின் அவருடைய புகழுடம்பு என்றும் மறைதலின்றி நிலவி வரும் என்பதில் ஐயமில்லை.

— நாவலர் நினைவுமலர் — 1938

**பகிடியும் வெற்றியும்**

நாவலர் சிலை பற்றிய சர்ச்சை சிலுவைக்குஞ் சிலைக்கும் வித்தியாசம் தெரியாதோர் சர்ச்சையாமே! சும்மா தெரியாதே! தற்போதைக்குத் தப்பிக்கொள்ளுந் தந்திரோபாயம் உது தான்.

## நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Improper Removal of the Statue of Navalar

We publish here the text of the Memorandum sent by The Srila Sri Arumuga Navalar Pani Manram to The Hon. C. Rajadurai, Minister of Regional Affairs to use his good offices to bring back the Icon of Navalar peacefully to the original site.

Please permit us to present the following for your kind consideration:

Srila Sri Arumuga Navalar Pani Manram is an organisation that promotes the cause for which NAVALAR lived and worked - cultural and religious uplift in the society. The All Ceylon Navalar Society is a similar one with almost the same aim, and was formed in 1967 as a public society. The statue of NAVALAR was made specially for installation at the specificlly construtced site adjoining the Nallur Kandaswamy Temple. This particular statue was taken in procession all over the country and installed at the above mentioned site where it stood for years. The devotees visiting the temple paid homage to Navalar daily from 25th, June, 1969, the date on which this statue was installed. Navalar was a great religious leader held in high esteem by Hindus living in Sri Lanka and outside. This statue is the only one that thousands of people are benefitted daily. On festival days the number of people gathering is over one lakh.

Such a statue was most unfortunately removed from this location secretly ignoring the fact that NAVALAR is held in such high esteem by all the Hindus, and installed temporarily at the newly constructed Cultural Centre. Even when this new location was the former home of Navalar it does not appear to be a fitting place. The percentage of persons visiting this place is not even ten and they come for a very different purpose than those who come to the former location at Nallur.

Navalar was recognised to be a great hero and religious leader by the Government of this country that honoured him by issuing a special postage stamp recently.

Your honour is well aware of the greatness of Navalar who did noble service in this country and in India just like Swami Vipulananda. Hence it is so very necessary that the statue be brought back to its former place for which requirement it was specially made. We consider it to be an act of some individuals with evil intensions who are quite unaware of the very purpose of having this statue in the former place. Besides, they dishonoured Navalar by removing the statue in a vehicle that the common man would not consent to travel in. Navalar is not so low a person. Let us refrain from further discussion about its mode of transport.

However it may not be out of place to mention here that much of presentation of facts and appeal of a similar nature has appeared in the press within this short period. We enclose herewith the monthly magazine published by this society where further details and appeal appears.

In consideration of the above facts and the urgency of the matter, we appeal to your honour to kindly help the Hindu society by getting this statue brought back to its former and fitting place for which this statue was specially made.

Such an act of yours would make the Hindus all over to place greater faith in your Honour and also the Government of the day of which you are part. We are forwarding a copy of this to the Hon. Minister of Cultural Affairs for information.

We make this humble appeal to you, Sir, to please have this error rectified and thereby earn the goodwill of the Hindus.

**[illegible]டியும் வெற்றியும்**

நாவலர் பெருமான் நல்லூரரான் வீதியில் இருக்கமாட்டேன் என்றவராமே!
அப்போ, வைமன் வீதி மூலையில்தான் முடங்கி இருக்கப்போகிறேன் என்று சொன்னவராமோ?

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

# நாவலர் காட்டிய நீதிநெறி நிற்போம்

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



நீதிவழி தவருது நிலைத்து நின்று நாவலர் தமது சமயத்தைப் பேணும் நீதி நெறிக்குப் பாதிரிமார் தலை வணங்கினுர்கள்.

இராம - இராவண யுத்தத்தில் இராமனது யுத்த நீதியை இராவணன் பாராட்டினுன். அவ்வாறே பாதிரிமாரோடு நடத்திய சமய யுத்தத்தில் நாவலரின் சமய நீதியைப் பகை முகத்தவர்களாகிய பாதிரிமாரே பாராட்டினர்.

"பூர்வ காலத்திலே சைவ சமய விருத்திப் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவ சமயிகளாலே நன்கு மதிப்பும் பர சமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன.

தற்காலத்தில் சைவ சமய விருத்திப் பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவ சமயிகளாலேயே அவமதிப்பும் இடைஞ்சலும் செய்யப்படுகின்றன.

பர சமயிகளோ, எனக்கு இடையூறு செய்யவுமில்லை; அவமதிக்கவுமில்லை. இஃதென்னை ஆச்சரியம்" — என்கிருர் நாவலர் பெருமான்.

'நம்முடைய சைவ சமயிகள் தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறும் செய்கிருர்கள்' என்று நம்மவர்களையே நொந்து கொள்ளுகின்ருர் ஆறுமுகநாவலர்.

இச்சந்தர்ப்பத்தில் நாவலர் பெருமான் மனம் நொந்து நம்மவர் மேல் ஏற்றிய கதைகளை அப்பெருமான் காட்டிய நீதி நெறி நின்று துவரத் துடைத்து நாவலர் பெருமானின் நல்லாசிக்குப் பாத்திரமாவோமாக.

— நாவலர் பெருமான்
150 ஆவது ஜயந்தி விழா மலர், 1972

# சபை எங்கே? சிலை எங்கே?

## ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் வினு

எங்கும் நிறைந்த பரம்பொருளின் பேரொளி நீக்கமற நிறைந்து வீசிக்கொண்டே இருப்பதாகச் சைவம் கூறுகின்றது. அஞ்ஞானம் மேலிட்டு இருள் சூழும் வேளையில் மெஞ்ஞானிகள் அவதரித்து இருள கற்றி வருவதை உலகறியும்.

சைவமும் தமிழும் அஞ்ஞான இருளில் அகப்பட்ட வேளை அவதரித்த எம்பெருமான் பணி புகழ் உலகறியும். அவர்தம் பணியைத் தமிழும், சைவமும் ஒன்றுசேர்த்து ஏற்றுக்கொண்டு அமைத்துக் கொண்டதே மணி மண்டபமும் சிலையுமாகும். நீக்கமற நிறைந்து பரம்பொருள் இருந்தாலும் ஆலயம்போல அவர் புகழ் சிலை எல்லோர் இதயத்திருந்தாலும், நாவலர் சபை அமைத்த சிலை இருக்கவேண்டியது நல்லூரான் திருவீதி மணிமண்டபமே.

நாவலர்சபை முன்னின்ருலும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டு பதினறு ஆண்டுகள் வாழ்வதற்கு வழி செய்த அடியார்கள் வாலிபப் பருவத்தில் அவரில்லாதிருக்க ஒப்புவார்களா? காவல் செய்த காவலன்தான் பொறுப்பானு? இல்லை இதிலும் ஓர் நன்மை உண்டு. பதினறில் மார்க்கண்டேயர் வாழ்வதுபோல் நாவலரும் மறுமலர்ச்சியுடன் வாழவே இறைவன் சித்தம்கொண்டான் போலும்.

இன்றைய காலகட்டத்தில் அவர் புகழைப் புனர்நிர்மாணஞ் செய்தமையும் அவர் நினைவைச் சிலையாக இதயம்கொள்ள வைத்தமையும் சிலை அசைவினல் ஏற்பட்ட பெரும் பயனெனலாம்.

ஏது எவ்வாருயினும் இளமை அழகுடன் எம்மைக் காத்தருளும் வேலவன் அருகே கந்தபுராணக் காவலன் நாவலர் சிலை இருக்கவேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்.

அழகு பொலிவுடன் அவர் சிலை மணிமண்டபத்துக் கொலுவிருக்க அடியவர்கள் வழிபட தரிசிக்கப் பொருத்தமான இடமும் அதுவே.

நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே !
சைவம் எங்கே !! என்ற தொனி மாற்றுருவம் பெறுகிறது.
நல்லைநகரில் அமைத்த நாவலர் சிலை எங்கே?
இங்கே ! காவலன் அருகேதான் அமையவேண்டும்.
எல்லையில்லாதவருக்கு சிலைவடித்தமைத்த சபை எங்கே !
செயல் எங்கே !!

## ஒளி விளக்கு

தமிழரசு போய்ப் பறங்கியரசும் ஒல்லாந்தவரசும் நடந்த காலத்தில் ஈழநாட்டை மூடியிருந்த மாயாவிருளைச் சீத்து ஞானப்பிரகாசம் காலுமாறு ஞானப்பிரகாசர் மரபிலே நல்லூரிலே ஆறுமுக நாவலர் அவதரித்தனர்.

—நாவலர் கோட்டம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

## நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயிங்கு இல்லாதகுறை சிலை கைமாறிப் போயிருக்கு

மு. கந்தையா,
ஏழாலை மேற்கு — சுன்னாகம்

அண்ணல் இளையதம்பி
அன்ப ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுக நாவலர்சீர்
வண்ணக் களஞ்சியமாய்
வாய்ந்தசிலை தந்தளித்த
புண்ணியனென் றுன்நினைவிற்
பூரிக்கும் அன்பருளம்
நின்னை நினைந்திந்நாள்
நெட்டுயிர்க்கும் நிட்டூரந்
தன்னையென் சொல்வோம்.

ஃ ஃ

தக்கோர் பலர்குழுமி
நல்லூர்ப் பெருமானை
நாள்நாளும் கண்டுதொழும்
எல்லாருங் கைஎடுக்க
ஏற்றதொரு சூழலிலே
அரசமரி யாதையுடன்
அன்றுகொணர்ந் தமைத்தசிலை
இரவோ டிரவாக
இடம்மாறிப் போயினது.

ஃ ஃ

ஆளில்லா மங்கைக்
கழகில்லை என்பதுவும்
நீயில்லா தெப்பணக்கும்
நிலையில்லை என்பதுவும்
வண்ணமணி மண்டபமே
வாய்திறந்து சொல்கிறது

ஃ ஃ

நாடறிய நீசமைத்த
நாவலனூர் திருச்சபையும்
நீயிறந்த கையோடே
நினைவிழந்து தாபசுகித்த
அஞ்ஞாத வாசம்விட்
டவசரமாய்த் திரும்பிவந்து
நாமேதான் செய்தோம்
நாமேதான் நாம்செய்தோம்

றோட்டி லிருந்ததனை
வீட்டிலே கொண்டுவிட்டோம்
என்றென்றென் றெல்லாம்
ஏதேதோ சொல்கிறது
என்ன இதுவென்
றெதுவும் புரியவில்லை
மலடி யறிவாளோ
மகவருமை என்பதன்றி
வேறெவ் விதத்துமிதை
விமர்சிக்க முடியவில்லை.

ஃ ஃ

நல்லூரான் வீதியிலே
நான்குறநான் காண்டுகள் நாம்
கொய்மலர்தூவித் தொழுது
கைஎடுத்த தெய்வமின்று
சொல்லாமல் மறைந்துவிட்ட
சூத்திரமென் னென்னென்றே
எல்லாருந் தம்மில்
இரங்குகின்றூ நிதைக்கேட்க
வல்லாரில் லாமையினால்
வாய்வாளா விருக்கின்றூர்
நீயிங் கில்லாதகுறை
நிதர்சனமாய் விட்டதையா.

ஃ ஃ

கால்கடுக்க நீநடந்து
கச்சேரிப் பதிவறையிற்
கனநாள் தவங்கிடந்து
நாவலர்சீர்ப் பெருமைக்காய்
நல்லதிருப் பணியிதெனக்
கேட்டார் வியந்திடநீ
மீட்டெடுத்த பெருநிலத்தில்
தக்கார் தலைவணங்க
மிக்குயர்பொற் கோயிலெனும்
கலாசார நிலையமுந்தான்
காரணமொன் றின்றியே
கைம்மாறிப் போயிருக்கு.

ஃ ஃ

கொடுத்தாரார் எடுத்தவரார்?
குழந்தைவிளை யாட்டிதுவோ?
கைதவமா மிச்செயலைச்
செய்தவப்பே றென்றுரைக்குஞ்
சிலர்சிலர்தம் வீம்புரையுஞ்
சிலுசிலுக்க லாகிறது
எல்லாமோர் சூதாட்டம்
இதற்கொரு மாறுட்டம்
என்றநிலை நிதர்சனமாய்
இன்றிங் கிருக்கிறது

ஃ ஃ

நிலைமையிதுவாக
நீகண்ட கனவான
ஐந்தாண்டுத் திட்ட
அமுலாக்கல் என்னுகும்?
அறுமுகநா வலரிறுதி
அபிலாஷைக் கென்னுகும்?
நாளொன் பதுபதினென்
றெண்பத்து நான்கினிலே
மீளஉனை வேண்டி
மிகப்பரிந்து யாம்விடுத்த
கவிதையஞ்சல் தற்செய்பாக்
காரணமும் விளங்கவில்லை
மீளநினை யூட்டும்
விருப்பால் இதுவரைந்தோம்
மீண்டும்வரும் நின்விரைவை
விரும்பிவழி பார்த்திருப்போம்.

## முழக்கம் ( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் ஸ்தாபனம் ஒவ்வொன்றுந் தமிழ், சைவ பண்பாட்டுக் கருவூலங்கள். பண்பாட்டு வளர்ச்சிக்கே பாடுபடும் பணி மனைகள், பண்பாட்டுணர்வே உங்கள் ஸ்தாபனங்களின் உயிர்.

உங்கள் மத்தியிற் பண்பாட்டுப் பிறழ்ச்சி தலை தூக்குகிறதென்றால், சைவத் தமிழ்ப் பண்பாடு சோதனைக்குள்ளாக்கப் படுகின்றதென்றால், பெரியோர் மகிமை பரிகாசத்துக்கிடமாக்கப் படுகிறதென்றால் நீங்கள் சும்மாய் இருக்கலாம். உலக சரித்திரத்திலே முதலாவது சிலை கடத்தல் இதுவே. இக்கடத்தலில் உங்கள் பொறுப்பை நீங்களாக உணர்ந்தெழவேண்டுவது உங்கள் கடன்.

எம் பெரியரிற் பெரியர், நல்லரில் நல்லர், நல்லை நகர் நாவலர் சிலை நல்லூரான் திருவீதியில் நான்கு ஆண்டுகள் நன்மதிப்புற்றிருந்த சிலை, நீதி நியாய, அறிவாசார, கண்ணிய, கௌரவ எல்லைகளில் தட்டாத காபடிக வித்தையால் கடத்தப்பட்டதிலிருந்து கருதக் கிடப்பதென்ன? இது இன்றைய பண்பாட்டுப் பிறழ்ச்சியின் பட்டப்பகல் விளையாட்டு, பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பரிகசிக்குங் கேலிக்கூத்து ஆதல் வெளிப்படை.

ஆகவே, இக்கட்டத்தில் வாய்வாளாதிருத்தல் வழக்கன்று. உங்கள் பண்பாட்டுணர்வை நீங்கள் பேணும் முகமாக, கடத்தப்பட்ட சிலை யதாஸ்தானத்துக்கு மீளக் குரலெழுப்புங்கள், உங்கள் குரல் நாடதிர எழுந்தொலிக்கட்டும்! நாவலர் குரல் எழுந்தொலிக்கட்டும்!

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரோகிகளுக்கு இடமேன்?

### நாவலர் குரலுக்குக் கண்டனம்

ஆசிரியர், நாவலர் குரல்

நாவலர் சிலையை அகற்றியவர்களுக்கு நாவலர்குரலில் மூன்றுவிளம்பரம் கொடுத்தது ஏன்? அதன் தலைவருக்கு அஞ்சலி எதற்கு? நாவலர் குரல் 1 ஒலி 1 முதலிலேயே ஒளியில்லாததாய் விட்டதே.

நாவலன் நகுல கணேசன்

## ஆசிரியர் விளக்கம்

நாவலர் அன்பரும் நாவலன் ஏட்டினை வெளியிட்ட இதழாசிரியருமான திரு. நகுல கணேசன் அவர்களுடைய கடுங் கோபங்கண்டு நாவலர்குரல் மகிழ்ச்சி அடைகின்றது. குற்றம் செய்தவர்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற சத்தியாக்கிரக நெறி அவர் கோபத்தில் துலங்குகிறது. நகுல கணேசன் அவர்களது பகிஷ்கரிப்புக் கோரிக்கையை ஈழத்துச் சைவத் தமிழுலகின் பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

நாவலர் குரல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலையை மீண்டும் நல்லூர் முருகன் வீதியிலே அமைந்துள்ள மணிமண்டபத்திற்குக் கொண்டு வரச் செய்யும் நோக்குடன் மக்கள் சக்தியைத் திரட்டுவதைத் தனது உடனடிக் கடமையாகக் கொண்டு வெளி வருகின்றது.

சிலை கடத்தியவர்களின் கயமையையும் அவர்கள் முன் வைக்கும் வாதங்களின் பலவீனங்களையும் மக்களுக்கு எடுத்துக் காட்டுவதன் மூலமே மக்கள் சக்தியைச் சிலைக் கடத்தல்காரர்களுக்கு எதிராக முழுமையாகத் திரட்ட முடியும். இந்த நோக்கத்திற்காகவே நாவலர் சபையில் இன்று எல்லாமுமாக இருக்கும் யாழ்-மாநகர ஆணையரின் ''கொல்லும் சொற்களை'' நாவலர் குரலின் இறுதிப் பக்கத்தில் வெளியிட்டோம்.

சைவசித்தாந்திகள் பரபக்கம், சுபக்கம் என இரண்டு பகுதிகளைக் கூறுவர். பிறர் மதங்கூறி மறுப்பது பரபக்கம். தம்மதங் கூறுவது சுபக்கம். இவ்வகையில் இறுதிப் பக்கம் பரபக்கமாக அமைந்தது.

நாவலர் குரல் தனிமனிதர்களுக்கெதிரானதன்று. சிலை கடத்தியோரின் ஆணவப் போக்கையே நாம் எதிர்க்கிறோம். இந்த எதிர்ப்பு நிலையானதல்ல. சிலை மீண்டும் மணிமண்டபத்துக்கு வந்ததும் நாவலர் குரல் நாவலர் புகழ் பரப்பும் பணியில் தொடர்ந்து ஈடுபடும்.

நாவலர் சபைத் தலைவர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் சிலை கடத்தல் தொடர்பான நிகழ்வுகளில் 'எட்ட' வைக்கப்பட்டிருந்தார். அவர் உண்மைகளை அறியாமல் இருளில் தவறான வழி காட்டப்பட்டார். தவறு நிகழ்ந்த பின்பே அவர் தமது தலைமையில் நடந்து முடிந்த இமாலயத் தவறை உணர்ந்து கொண்டார். தமது ஆழ்ந்த கவலையைப் பலருக்கும் கூறினர். நெருங்கிய அன்பர் ஒருவருக்கு நடந்த தவறுக்கு வருந்துவதாகக் கடிதமும் எழுதினர். மாயை பெற்ற புதல்வர்கள் சார்ந்ததன் வண்ணமான ஆன்மாவை மயக்குவது உலக இயற்கை.

வருந்தினல் மன்னிக்கப்படும் என்பர். எனவே, நாவலருக்கு நல்லை முருகன் வீதியிலே சிலை நிறுவும் பணிக்குத் தலைமை தாங்கிய அமரர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தியது தமிழ்ப் பண்பாட்டுக்கும் சைவப் பண்பாட்டுக்கும் அமைவானதே என்பதை நாவலர் குரல் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறது.

—ஆசிரியர்

## சிலை இடித்த இடத்தில் பண்ணிசைத்த நவீன நீரோக்கள்

## இந்து சாதனத்திற்கு நாவலர் பித்தன் கடிதம்

*அன்று நீரோ அரசன் ஆற்றிய ஆராதனை.*

வரலாறு பரவலாக விபரீதச் செயல்கள் வரையப்பட்டு வருஞ் சந்ததியினருக்கு உணர்த்தும் வழிகாட்டியாகும். உரோமாபுரி தீச்சுவாலையில் அழிந்தொழிந்து போய்க் கொண்டிருந்த அதே வேளையில் நீரோ அரசன் நிம்மதியாக நரம்பு வீணையை மீட்டுக் கொண்டிருந்தான் என்று யாரோ கண்டதாக ஒரு கதையுண்டு.

நாவலர் சிலை அகற்றப்பட்ட அதேயிடத்தில் பண்ணிசை வழிபாட்டினை ஆவலுடன் மேவினர் சில அன்பர்கள்.

மேலே முதலிற் காட்டப் பெற்ற விபரீதமும் சிலைச் சிதைவு நிலையத்தில் நிகழ்ச்சியும் ஒன்றுக்கொன்று வேடிக்கையிற் பொருத்தமாகுமல்லவா?

சிலை கடத்தப் பட்டதால்
மனநிலை கடத்தப்பட்ட
**நாவலர் பித்தன்**
—இந்து சாதனம்
ஒக்ரோபர் 1985.

## பகிடியும் வெற்றியும்

நாவலர் பிரச்சனைக்குரியவர் தானுமே!

ஓ! அதுதான் அதற்கொரு சாம்பிள் (Sample) காட்டுதற்குத்தான் சிலையைக் கடத்திச்சினமோ?

ஃ ஃ ஃ

சரித்திரத்திலேயே முதல் சிலையுடைப்பு வைபவம் (Iconochasy) நாவலர் சிலையுடைப்புத்தானுமே!

உலகத்திலேயே பண்பாட்டழிவுக்கு முதல் முதற் கால்கோள் செய்ததும் நாவலர் சிலை கடத்திய நம்ம ஊர்தானே.

இவ்விதழ் யாழ்ப்பாணம், 411/1, காங்கேசன்துறை வீதியில் இருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றத்தினரால், யாழ்ப்பாணம், ஸ்ரீ காந்தா அச்சகத்தில் 1986-01-01 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org